1967 ஜூலை 1]

திரு. சி. கோவிந்தராசன் : டைரக்டர் ஆப் மெடிக்கல் எஜுகேஷன், டைரக்டர் ஆப் மெடிக்கல் சர்வீஸஸ் என்று இருவர்கள் இருப்பதால் இருவருடைய அலுவல்களும் வரையறுக்கப்படாத காரணத்தாலே நிர் வாகத்திலே காலதாமதம் ஏற்படுகிறதாகத் தகவல் வந்திருக்கிறதா, அப்படியிருந்தால் ஒவ்வொருவருக்கும் என்ன என்ன அலுவல்கள் என்ப தை திட்டவட்டமாக வரையறுத்து நிர்வாகக் காரியங்களைச் சீக்கிரமாகச் செய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : காலதாமதம் ஆவதாகச் சொல்வது சரியல்ல. குறிப்பாக, ஸ்பெஸிபிக்காகச் சொன்னுல் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ந. வீராசாமி : முன்பு இருந்த அரசாங்கத்திற்கும், டைரக்டர் ஆப் மெடிக்கல் சர்வீஸஸுக்கும் ஏற்பட்ட தகராறு காரணமாக, டைரக்டர் ஆப் மெடிக்கல் சர்வீஸஸுக்கு இருக்கின்ற அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தில், டைரக்டர் ஆப் மெடிக்கல் எஜுகேஷன் என்ற அதிகாரி நியமிக்கப்பட்டாரா ? இந்தப் பதவியை எடுத்துவிடுவதற் கான உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது கனம் உறுப்பினரு டைய கருத்து. பதில் ஒன்றும் இல்லை.

பஞ்சாயத்து யூனியன் மருந்தகங்கள்

***136 வினு.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதில ளிப்பாரா—

ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தாத கூட்டு மன்றப் பகுதிகளில் உள்ள அரசாங்க டிஸ்பென்ஸரிகளை ஆரம்பச் சுகாதார நிலையங்களாக மாற்றும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : இல்லை என்ருல், இனிமேலாவது அப்படி மாற்றும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபோன்ற உத்தேசம் இப்பொழுது இல்லை.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : பிரைமரி ஹெல்த் சென்டர் என்பது ஏதோ பிரமாதமாக இருக்கிறது, ரெகுலர் டிஸ்பென்சரி போன்று மாற்றப் பட்டு பெரிய வசதிகள் எல்லாம் கிடைக்கின்றன என்று வெளியிலேதான் சொல்லப்படுகிறதே தவிர, அது தவருன முறையில் தான் சொல்லப்படு கிறதேயொழிய அது நடைமுறையில் பிரயோஜனம் இல்லை. ஏதோ ஆம்பு லன்ஸ் மாதிரி அவர்களுக்கு ஜீப் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை வைத்துக் கொண்டு அங்கே இருக்கிற மருத்துவர்கள் சுகவாசிகளாக இருக்கிருர்கள். ஆகவே, இந்தத் திட்டத்தைக் கூடுமான வரையில் கைவிடுவதற்கு சர்க்கார் யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் அவர் களுடைய கருத்து சரியல்ல. பிரைமரி ஹெல்த் சென்டர்கள் நல்ல முறை யில் நடத்தப்படுகின்றன. இந்தத் திட்டத்தினை கிராமப் புறங்களிலே விரிவு படுத்துவதற்கும், நல்ல மருத்துவ வசதிகளைச் செய்துகொடுப்பதற்கும் ஏற்பாடு செய்கிற நிலைமை இருக்கிறது.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவரவர்களே, புதிதாக ஏற் படுத்தப்பட்ட பிரைமரி ஹெல்த் செண்டர்களில் டாக்டர்கள் இல்லை, ஹெல்த் விஸிட்டரும் இல்லை, ஜீப் கொடுப்பது இல்லை, இப்படிப்பட்ட குறைகளை நீக்குவதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் சொல்வது சரியல்ல, மருத்துவ மனைகளிலே வேண்டிய வசதிகள் செய்து தரப்பட்டிருக்கின்றன. குறிப்பாக எந்த இடத்திலே டாக்டர் இல்லை என்று தெரிவித்தால் அதன் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. நா. காசிராமன் : நமது தமிழ்நாட்டிலுள்ள எல்லா மருத்துவ நிலையங்களிலும் டாக்டர்கள் இருக்கிறார்களா ? இல்லையென்றால் எத்தனை நிலையங்களிலே டாக்டர்கள் இல்லை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : எல்லா மருத்துவ நிலையங்களிலும் டாக்டர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். எதில் இல்லை என்று குறிப்பாகச் சொன்னால் நடவடிக்கை எடுக்கலாம்.

(மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர்—தலைமை.)

மு.ப 10-30 **திரு. எம். கண்ணப்பன் :** ஆரம்பச் சுகாதார நிலையங்கள் கிராமப் புறங்களில் இருக்கிற காரணத்தால் பட்டம் பெற்ற டாக்டர்கள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. ஆகவே, அவர்கள் பட்டம் பெற்றவுடன் குறிப்பிட்ட காலம் வரை கிராமங்களில் பணியாற்ற வேண்டுமென்று உத்தரவிடும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது போல் கிராமப் புறங்களில் பணியாற்ற டாக்டர்கள் முன் வருவதில்லை என்று சொல்வது சரியல்ல. ஏற்கனவே, சுமார் 200 பேர் வேலைக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : மெடிகல் காலேஜில் எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்று ஆஸ்பத்திரியில் ஓராண்டுகாலம் பயிற்சி பெற்ற பிறகு சம்பளம் குறைவு என்ற காரணத்தால் சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் வேலை செய்ய அவர்கள் முன் வராமல் பிரைவேட் டிஸ்பென்சரி வைக்க கவனம் செலுத்துகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த ஆண்டு அப்பேர்ப் பட்ட நிலைமை இல்லை. நான் ஏற்கனவே சொன்னது போல், 200 பேர் வேலை கோரிக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. முனு. ஆதி : பிரைமரி ஹெல்த் சென்டர்கள் ஒரு யூனியனுக்கு ஒன்று என்றுதான் இருக்கிறது. அதை மேலும் ஒன்றாக உயர்த்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றிப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : வினுக்கள்—விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு—ஒரு உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்]

2. ஒழுங்குப் பிரச்சினை

நடவடிக்கைகள் சுருக்க வெளியீட்டில் உறுப்பினர் வெளிநடப்புப்பற்றிக் குறிப்பிடப்படாமை.

திரு. கே. விநாயகம் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். மாண்புமிகு உதவி சபாநாயகர் அவர்களே, என்னுடைய கையிலே உள்ள இந்தத் தாள்—நேற்றைய குறிப்புகளைப் பற்றி விவரிக்கிறது. "Brief Record of the proceedings of yesterday" இது ப்ரீஃப் என்பது எனக்குத் தெரியும். அந்தத் தாளிலே நேற்று நடந்த நிகழ்ச்சிகள் எல்லாம் விவரமாகச் சொல்லப்படவில்லை என்றாலும், அதனுடைய குறிப்பு